உலகப் பொதுமறை

# வள்ளுவம்

தொகுதி-1




தொகுப்பாசிரியர்

**உடையார்கோவில் குணா**

பதிப்பாசிரியர்கள்

முனைவர் **அ.ஜெஸின் பிரான்சிஸ்**

முனைவர் **க.சுஜாதா**

முனைவர் **க.இந்துமதி**

முனைவர் **சி.சங்கீதா**

**செ.தமிழரசி**

**உலகத் திருக்குறள் மாநாடு - 2019**

**கோலாலம்பூர் - மலேசியா.**

உள்ளத்தனையது உயர்வு

தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-10

# நூல் விவரம்


தலைப்பு : உலகப் பொதுமறை வள்ளுவம் (தொகுதி–1)
(உலகத் திருக்குறள் மாநாட்டு கருத்தரங்கம்)

தொகுப்பாசிரியர் : **உடையார்கோவில் குணா.**

துணை
பதிப்பாசிரியர்கள் : முனைவர் **அ.ஜெஸின் பிரான்சிஸ்**
முனைவர் **க.சுஜாதா**
முனைவர் **க.இந்துமதி**
முனைவர் **சி.சங்கீதா**
**செ.தமிழரசி**

மொழி : தமிழ், ஆங்கிலம்

உரிமை–வெளியீடு : தமிழ்த்தாய் அறக்கட்டளை
மாரியம்மன் கோவில்,
தஞ்சாவூர்–613 501.
தொலைபேசி: 04362268167
கைபேசி: 9443938797, 7530002454.

அளவு : டெம்மி

பக்கங்கள் : 318

விலை : ரூ.250/–

ISBN : **978-81-909877-5-2**

நூல் வடிவமைப்பு: பரிதி பதிப்பகம்,
சோலையார்பேட்டை.
வேலூர் மாவட்டம்.
கைபேசி: 8098908840, 7200693200

# வள்ளுவர் வழிகாட்டும் வாழ்க்கையில் வறுமை

திருமதி.விஜிதா.ரவிசங்கர்

18

உலகளாவியரீதியில் வறுமையானது மக்களின் வாழ்க்கையைச் சிதைக்கின்றது. வறுமையைப் போல் உலகில் கொடியது வறுமையே ஆகும் என்பது வள்ளுவர் முடிபாகும். வறுமையானது நாட்டு மக்களின் கல்வி சுகாதாரம், போசாக்கு வீடமைப்புமற்றும் சூழல் எனஅனைத்து வாழ்வாதாரங்களையும் பாதித்து தனி மனித விழுமியங்களைச் சிதைப்பதுடன் குடும்பங்களையும் சமுகங்களையும் சீர்குலைக்கின்றது. பொதுவாக வறுமைக்கான வரைவிலக்கணங்கள் பல்வேறு அறிஞர்களால் முன் வைக்கப்பட்டுளன எனினும் ஐக்கியநாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமானது 'ஒரு மனிதன் உயிர்வாழ்வதற்குத் தேவையான குறைந்த பட்சத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வருமானத்தைக் கொண்டிராத நிலைமையே வறுமையாகும்' என வறுமைக்கான வனவிலக்கணத்தை வரையறை செய்துள்ளது. வறுமையானது ஒரு மனிதனை நீண்ட ஆயுள் ஆரோக்கியமான வாழ்க்கை கௌரவமான வாழ்க்கைத் தரத்தைப் பேணுதல், சுதந்திரம் சுய கௌரவம் மற்றும் ஏனையவர்களால் மதிக்கப்படும் தன்மை என்பவற்றிலிருந்து தடுக்கின்றது. (1997)

இத்தகைய வறுமைபற்றி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பொய்யா மொழிப்புலவர் திருவள்ளுவரால் இயற்றப்பட்ட உலகப்பொதுமறை தமிழ்மறை என அழைக்கப்படும் திருக்குறளில் எடுத்தியம்பப்பட்டுள்ளது என்பதுவியக்கத்தக்கதே. திருக்குறளானது பல்வேறு விடயங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அரசியல், சமுகம் மக்கள் வாழ்க்கை முறைகள், பண்பாடு சூழல் விவசாயம் இன்னும் பல்வேறு கூறுகளைத் தன்னகத்தே உள்ளடக்கிய ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களைக் கொண்டுள்ளது. திருவள்ளுவர் வாழ்ந்தகாலத்திலேயே

வறுமையால் வாடும் மக்களும் செல்வத்தால் இன்புற்று மகிழும் மக்களும் வாழ்ந்துள்ளனர். அவர்காலத்தில் வாழ்ந்த சமுதாயம் பல ஏற்றத்தாழ்வுகளைக் கொண்ட சமுதாயமாகவே இருந்தது. சமுதாயத்தில் பலர் துன்புறுவதையும், சிலர்மட்டும் இன்புறுவதையும் அவர விரும்பவில்லை. மக்கள் மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்றே அவர் பெரிதும் விரும்பினார்.

வறுமையின் கொடுமையை எவ்வளவு விதந்துரைக்க முடியுமோ அவ்வளவிற்கு விரித்து விளக்கியிருக்கின்றார். வறுமையில் துன்புறுவோருக்குச் செல்வமுடையோர் உதவிபுரிதல் வேண்டியது அவசியம் என்பதையும் வலியுறுத்தியுள்ளார். இல்லாதவர்கள் உள்ளவர்களிடம் போய்; பொருள்கேட்பதும், இரப்பதும் குற்றம் எனவும் கூறியுள்ளார். இதன்பின் எந்தவொரு மனிதனும் பிறரிடம் எதுவொன்றையும் இரக்கக்கூடாது. இரப்பததைப் போல் இழிவானதுவே றொன்றுமில்லை இரப்பது மனிதத்தன்மையே அன்று எனவும் ஒருவன் பிச்சை யெடுத்துத்தான் வாழவேண்டும் என்பதும் தலைவிதியல்ல. இந்த் நிலையுடன் எந்தவொரு மனிதனையும் கடவுள்படைக்கவில்லை எனவும் வள்ளுவர் ஆணித்தரமாகக் கூறியுள்ளார். திருவள்ளுவர் வறுமையின் கொடுமை பற்றிக் குறிப்பிடுகின்ற பொழுது கொடுக்கும் சமுதாயம் வாங்கும் சமுதாயம் என்றவேற்றுமை இருப்பதை மறைமுகமாகக் கண்டிக்கின்றார். இவ் உண்மையை நல்குரவு, இரவு, இரவச்சம் என்ற மூன்று அதிகாரங்களில் முப்பது குறள்களால் விளக்கியுள்ளளார்.

வறுமையைப்பற்றி அவர்கூறுவதைக் கேட்பவர்களின் உள்ளம் உருகாமற்போகாது. 'இன்மையின் இன்னாததுயாது எனின்? இன்மையின் இன்மையே இன்னாதது' (1041) வறுமையைப் போலத் துன்பமுள்ளது வேறுயாதென்றால் வறுமையைப போன்ற துன்பம் உள்ளது வறுமையேதான். அதாவது வறுமையை இதைவிட வேறுவகையில் சித்தரிக்க முடியாது. வறுமையைப் போல் துன்பம் தரக்கூடியது வேறு எதுவுமேயில்லை. எல்லாத் துன்பங்களுக்கும் அதுதான் ஊற்றுக்கேணி. வறுமைநோய்க்கு ஆளானவன் இம்மையிலே எந்த இன்பத்தையும் பெறமாட்டான். அவன் வாழ்நாள் முழுவதும் துன்பத்தால் வருந்துவான். இது கண்கூடான காட்சி எனக் குறிப்பிடுகின்றார்.

'இம்மை என ஒருபாவி மறுமையும் இம்மையும்இன்றிவரும்' (1042) வறுமையென்று சொல்லப்படும் ஒருபாவி ஒருவனிடம் அணுகும் போது அவனுடைய மறுமையின்பமும் இம்மையின்பமும் இல்லாமல் அழியும் படிவரும் எனக் குறிப்பிடுகின்றார். அதாவது வறியவன் தன் வயிற்றுப் பசியைத் தணித்துக் கொள்ள எதுவும் செய்வான். நாம் செய்வது நன்மையா? தீமையா? நீதியா? அநீதியா என்று எண்ணிப்பார்க்க மாட்டான். இவ்வாறு எண்ணிப்பார்க்கும் பொறுமையோ அறிவோ அவனிடம் இராது. ஆதலால் நெறியில்லா நெறியில் சென்று அடாத செயல்களைச் செய்வான். அவனுக்கு மறுமையின்பமும் இல்லை. இம்மையின்பமும் இல்லை. இத்தகைய கொடுமையுள்ளது வறுமைஎனக் கூறுகின்றார் திருவள்ளுவர்.

வறுமை என்பது என்ன? வாழ்க்கையின் தேவைகள் பலவகையின ஆயினும் அவசியம் அவசியமின்மையைக் கருதாமல் பலர்நிறைய ஆசைப்படுகின்றனர். அவசிய மில்லாதவைகளைக் கருதி அவை கிடைக்காத போது அதனையும் வறுமை என்று கருதி அல்லற்படுவார்கள் சிலர். ஆசையும் தனித்து வருவதன்று. அதற்குப் பல தோழமைகள் உண்டு. அலையின் பின் அலைமோதும் வெள்ளத்தை ஆசைக்கு உவமிக்கின்றார் மாணிக்கவாசகர். ஆகவே வறுமையின் பெயர் ஆசை எனவும் கூறலாம். ஆசையினால் வரும் வறுமை குடியின் உறவையும் கெடுக்கும் குடியையும் கெடுக்கும், அழகையும் கெடுக்கும், வலிமையையும் கெடுக்கும், புகழையும் கெடுக்கும். **'தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக நல்குரவு என்னும் நசை' (1043)** வறுமைத்துன்பத்தால் உறக்கமும் வராது. நெருப்பினுள்ளும் கிடந்து தூங்கலாம். ஆனால் வறுமையில் தூங்க முடியாது என்று கூறுகின்றார் திருவள்ளுவர். நெருப்பு உடம்பை மட்டும் சுடும். வறுமை உயிரையும் உயிருணர்வையும் சுடும். ஆதலால் வறுமைத் துன்பத்தில் கண்ணை மூடவும் முடியாது என்கின்றார் திருவள்ளுவர். (1049) நேற்று மகிழ்ந்த ஒன்றினை மீண்டும் அடைந்து மகிழவிரும்புவார்கள். ஆனால் வறுமையோ வாட்டுவதாகும். அதை மீண்டும் யார் விரும்புவார்கள்? வறுமையில் வாடுகின்றவர்களை வறுமையின் வழிச்சுவட்டைப் பார்த்தாலும் அஞ்சுவர். 'இன்றும் வருவது கொல்லோ நெருநலும் கொன்றதுபோலும்நிரப்பு'(1048) வறுமை தனித்துவரும் துன்பமல்ல. வறுமைக்கு நிறையப் பரிவாரங்கள் உண்டு. வறுமை தன்னுடைய பரிவாரங்களுடன் வந்து ஆக்கிரமித்து அழித்து நரகத்தில் கொண்டு

போய்ச் சேர்த்துவிடும். வறுமையைத் தொடர்ந்து கவலை வரும். கவலையைத் தொடர்ந்து சோம்பல் வரும்பின் நோய். இவ்வாறு ஒன்றன் பின் ஒன்றாகத்தொடரும். வறுமையின் பிடியிலிருந்து விடுபட்டால் மற்றைய துன்பங்களிலிருந்தும் விடுதலை பெறலாம். **'நல்குரவென்னும் இடும்பையுள்பல் குரை துன்பங்கள் சென்றுபடும்' (1045)** வறுமை பரம்பரையாக வந்த பண்பாட்டையும் கெடுக்கும். நல்ல குடியில் பிறந்தோர் எப்பொழுதும் சோர்வின்றி இருப்பர். நல்ல சொற்களையே பேசுவர். ஆயினும் வறுமை வந்துற்ற போது சோர்வடைவர். தகாத சொற்களைப்பேசுவர். **'இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த சொற்பிறக்கும் சோர்வுதரும்' (1044).**

கற்றுணர்ந்து மெய்ப்பொருள்கண்டாராயினும் அவர் வறுமையினராயின் அக்கல்வி பயன்படா. சிறந்த மெய்ப்பொருளை நன்றாக உணர்ந்து கூறினாலும் பயன்படாது. கேட்பவர்கள் இவர்களது குறையைக்கேட்டு அக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டிவரும் எனக் கருதி இவரைக் கண்டாலே ஒதுங்கி ஒளிந்து விடுவார்கள். அப்படியே கேட்டாலும் அவர்கள் நன்குணர்ந்து சொன்னாலும் பரிவோடு கூறினாலும் அதைப் பிழைப்பிற்கு வழி யென்றேகருதுவர். ஆதலால் வறுமையாளரின் கல்வி பயன்படாது. அவர் சொல்லும் பயன்படாது. ஆகவே கல்வியும் கருத்தும் பயன்பட வேண்டுமானால் வறுமையைத் தொலைக்க வேண்டும். ஆனால் இன்றோ கல்வியும் கருத்தும் வணிகமாக்கப்பட்டு வருகின்றது. அதனால்தான் நாட்டில் நாள்தோறும் எண்ணற்ற மேடைகளில் சொல்லப்படும் சொற்கள் பயன்தராமல் போகின்றன போலும். இதனை **'நற்பொருள்நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார் சொற்பொருள் சோர்வுபடும்' (1046)**

வறுமையுள்ளவர்கள் எல்லோரும் மானமுடன் வாழமுடியாது. உயிர் வாழவிரும்பும் வறியவர்கள் பிறரிடம் பிச்சை கேட்கத்தான் செய்வார்கள். உயிரை வைத்துக் கொள்ள ஏதாவது செய்து செய்ய வேண்டுமென்பதற்காக இரப்பதை வள்ளுவர் விரும்பவில்லை. ஆயினும் வறுமையால் இரப்போரை அவர் தடுக்கவுமில்லை. கண்டவர்களிடமெல்லாம் கையேந்தி நிற்க வேண்டாம். கருணை நிரம்பியவர்களிடம் இரக்கலாம். பொருள் பெறலாம் என்று கூறுகின்றார். இதனை இரவு என்ற அதிகாரத்தின் மூலம்

விளக்குகின்றார். **'இரக்க இரத்தக்கார்க்காணிகன்; கரப்பின் அவர்பழி தம்பழிஅன்று'** ***(1051)*** இரக்கத்தக்கவரைக்கண்டால் அவரிடம் பொருள் கேட்கலாம். அவர் இல்லையென்று மறைப்பாரானால் அது அவருடைய குற்றமே யொழிய இரப்பவரது குற்றமல்ல எனக்கூறுகின்றார். அடுத்து இரந்து கேட்ட பொருள் தன் மனம் துன்புறாதபடி எளிதிலே கிடைக்குமானால் இரப்பது கூட இன்பம் தரும் எனக் கூறுகின்றார். ஒளிக்காமல் உள்ளம் கனிந்து உதவும் உத்தமர்களிடம் இரப்பதே நலம்.

இதனால் துன்பம் இல்லை எனக்கூறுகின்றார். **'இன்பம் ஒருவற்கு இரத்தல், இரந்தவை துன்பம்உறாஅவரின்** ***(1052).*** தன்னிடம் இருப்பதை மறைத்துக் கூறும் தன்மையைக் கனவிலும் அறியாதவர்களிடத்தில் இரந்து கேட்பதும் பிறருக்குக் கொடுப்பது போன்று சிறப்புடையது எனக்கூறுகின்றார். **'இரத்தலும் ஈதலேபோலும் கரத்தல் கனவிலும் தேற்றாதார்மாட்டு'** ***(1054)*** மேற்கூறப்பட்ட மூன்று குறள்களும் இரத்தலால் இழிவு இல்லை என்பது பற்றிக் கூறுகின்றது. வறுமையால் இரந்து பொருளைப் பெற்றுக் கொள்ளாதவர் இல்லாவிட்டால் கொடுக்கின்றவர் களிடத்தில் எவ்வாறு புகழ் உண்டாகும். அதாவது இரக்கின்றவர்கள் இல்லாது விட்டால் கொடுக்கின்றவர்களுக்குப் புகழ் செல்வாக்கு எதுவும் இராது. கொடுக்கின்றவர்களின் புகழ் வளர்வதற்காகவே இரப்பவர்கள் இருக்க வேண்டும் என்பதைப் பின்வரும் குறள்மூலம் விளக்குகின்றார். *'ஈவார்கண் என் உண்டாம் தோற்றம் இரந்துகேள் மேவார்இலா அக்கடை' (1059)* இல்லாதவர் உள்ளவர் என்ற வேற்றுமையுள்ள சமுதாயத்தில் ஈவோரும் இரப்போரும் இருந்து தான் தீருவர் என்பதையே மேலுள்ள நான்கு குறட்பாக்களும் விளங்கியுள்ளன. எல்லோரும் எல்லாச் செல்வங்களும் பெற்றிருக்கும் சமுதாயத்தில்தான் ஈவோர்இரப்போர் என்ற பிரிவினர் இருக்க மாட்டார்கள். இக்கருத்தினையே திருவள்ளுவர் வெளிப்படையாகக் கூறாது மறைமுகமாகக் கூறியுள்ளார்.

அடுத்து 'இரத்தலில் இழிவில்லை' எனக்கூறிய திருவள்ளுவர் இரப்பதற்கு அஞ்சவேண்டும் என்ற கருத்தினையும் முன் வைக்கின்றார். இதனை இரவச்சம் என்ற அதிகாரத்தில் விளங்கியுள்ளார். **'கரவாது உவந்து ஈயும்கண் அன்னார் கண்ணும் இரவாமை கோடி உறும்'** ***(1061)*** உள்ளதை ஒழிக்காமல்

மகிழ்ச்சியோடு கொடுத்து உதவுகின்ற கண்போல் சிறந்தவரிடத்திலும் ஒன்றை இரந்து வாங்கிக் கொள்ளாமல் இருப்பதே கோடி மடங்கு நல்லதாகும் என்பதே இக்குறளின் பொருளாகும். இக்குறளானது இரத்தல் நன்று எனக்கூறியதற்கு நேர்முரண்பட்ட கருத்துள்ளதாகும். **'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகு இயற்றியான்' (1062)** இவ்வுலகில் சிலமக்களை இரந்தும் உயிர் வாழவேண்டும் என்று கடவுள் விரும்பினால் இத்தகைய உலகைப் படைத்த கடவுள் அந்த இரவலரைப் போல எங்கும் அலைந்து அழிக என்பதே இக்குறட்பாவின் பொருளாகும்.

உலகைப் படைத்தவன் யாரையும் பிச்சையெடுத்து வாழும்படி படைக்கவில்லை. பிச்சையெடுப்பது தலைவிதி என்று சொல்லுவது பொய். மக்கள் அறியாமையால் கோழைத் தனத்தால் சோம்பேறித் தனத்தால் தான் பிச்சை எடுக்கின்றார்கள். இவ்வுண்மையையே இக்குறள் எடுத்தியம்பியது. **'ஆவிற்கு நீர் என்று இரப்பினும் நாவிற்கு இரவின் இளிவந்தது இல்' (1066)** பசுவிற்குத் தண்ணீர் வேண்டும் என்று இரந்து கேட்டாலும் இழிவுதான். அந்த இரத்தலைவிட நாவிற்கு இழிவானது வேறு ஒன்றும் இல்லை. அதாவது ஆபத்திற்குப் பாவம் இல்லை என்பர். பசு தண்ணீர் இல்லாமல் தவித்தாலும் சரி; அதன் பொருட்டு இரத்தலும் கூடாது. அதன் உயிரைக் காப்பாற்றுவதற்குத் தன் முயற்சியாலேயே தண்ணீரைத் தேடித்தர வேண்டும். தரும காரியத்திற்காக யாசிப்பதில் குற்றமில்லை என்று கருதிப் பிறிடம் இரப்பது குற்றமேயாகும். அது இழிவிற்கே இடமாகும். இரப்பதை எவ்வளவு வன்மையாக எதிர்க்கின்றார் என்பதை இக்குறளில் காணலாம்.

ஆகவே தெளிந்த நீர் போல் சமைத்த கூழாயிருந்தாலும் சரி, தன் முயற்சியால் கிடைத்த அவ்வுணவை உண்பதைவிட இனிய உணவுவேறு ஒன்றும் இல்லை. அதாவது தன் முயற்சியால் வாழ்வதே உயர்ந்த வாழ்வு. அறுசுவை உண்டிக்கு வழியின்றி வெறும் கூழை உண்டாலும் அதுவே சிறந்த வாழ்வு. எவருடைய இகழ்ச்சிக்கும் ஆளாகாத மானமுள்ள வாழ்வு என்பதை **'தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது உண்ணலின் ஊங்கு இனியது இல்' (1065)** என்ற குறள்மூலம் வலியுறுத்துகின்றார். தொகுத்து நோக்கின் வறுமை என்பது மக்களின் வாழ்வில் பல துன்பங்களைக் கொண்டுவரக் கூடியது. ஆகவே வறுமையைத் தணிக்க இரக்கலாம்.

செல்வம் உடையவர்கள் இல்லாதவர்களுக்கு உதவி செய்யலாம் எனக்கூறும் வள்ளுவர், இரப்பது மனிதத்தன்மை அற்றது என்ற கருத்தையும் விளக்கியுள்ளார். ஆகவே மனிதன் மனிதனாக வாழவேண்டுமானால் தன்முயற்சியினால் முன்னேறுவதே சிறந்ததாகும் என்பதே வள்ளுவர் காட்டும் வழியாகும்.

**திருமதி.விஜிதா.ரவிசங்கர்**
முதுநிலை விரிவுரையாளர்
பொருளியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்